

ஆவடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசரை ஆதரித்து திரைப்பட நடிகர் சத்யராஜ் திருநின்றவூரில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி, நகரச் செயலாளர் தி.வை.ரவி, நகர நிர்வாகிகள் நாகராஜ், ரவி, பாபு, கவுன்சிலர் பி.எல்.ஆர்.தேவி யோகா, வார்டு செயலாளர்கள் சலீம், மோகன்ராம் உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வஞ்சகமான - தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த

# எதிர்க்கட்சியினரை பெண்களுக்கு எதிரானவர்கள் எனச் சித்தரிக்க மோடி முயற்சி!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா அறிக்கை!

**புதுடெல்லி, ஏப். 20-**

**தங்கள் நோக்கங்கள் நிறை வேறுவதற்காக எத்தகைய குறுக்குவழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.**



மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமரான மோடி, முன்எப்போதும் இல்லாத வகையில், எதிர்க்கட்சிகள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட தாக்குதலை தொடுக்கும் வகையில் ஒரு தேசிய உரையை தொலைக்காட்சியில் நிகழ்த்தியுள்ளதாக கூறியுள்ளார்.

ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஒரு பின்னடைவாக அமைந்த ஜனநாயக வாக்களிப்பு செயல்முறையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, மக்களவை வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வியின் மீதான தனது சகிப்புத்தன்மையின்மையையே பிரதமரின் உரை வெளிப்படுத்துவதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார்.

தொகுதி மறுவரையறை மற்றும் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு ஆகிய இரண்டு அரசியலமைப்பு திருத்தங்களையும் ஒன்றாக இணைக்கும் வஞ்சகமான மற்றும் தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த அனைத்து எதிர்க்கட்சிகளையும், பெண்களுக்கு எதிரானவர்கள் என்று சித்தரிக்க பிரதமர் மோடி முயன்றுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவையில் ஆளும் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததததால், இந்த மசோதா வாக்கெடுப்பில் தோல்வியடையும் என்பதை நன்கு அறிந்திருந்தும், எதிர்த்து வாக்களிப்பவர்களைக் குறை கூறுவதற்காகவே மோடி அரசு இவ்வாறு செய்துள்ளதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார். தங்கள் நோக்கங்கள் நிறை வேறுவதற்காக எத்தகைய குறுக்குவழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக திருச்சி சிவா தெரிவித்துள்ளார். இது பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைந்துள்ளதாகவும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா எதிர்கட்சிகளின் ஒத்துழைப்புடன் மட்டுமே கடந்த 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது என்பதை மோடியால் புறந்தள்ளிவிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பதை பிரதமர் மோடிக்கு நினைவூட்டுவதாகவும் திருச்சி சிவா குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தற்போதைய ஆட்சியில்தான், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 40 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதும் பிரதமருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் திருச்சி சிவா கூறியுள்ளார்.

மேலும், காவல்துறையில் பெண்களை பணியில் அமர்த்தியதும் திமுக ஆட்சியில்தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேநேரம், இந்தியாவில் 20 மாநிலங்களில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வில், டெல்லியில் மட்டும்தான், ஒரேயொரு பெண் முதலமைச்சர் உள்ளதாகவும், அதுவும் டெல்லியில் பெண் அமைச்சர்கள் யாரும் இல்லை என்பதை பிரதமர் மோடி வசதியாக மறந்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் எதிர்க்கட்சிகள் பெண்களின் நலனுக்கு ஆதரவாக செயல்படுவதில்லை என்று குற்றம் சாட்டுவதற்கான நம்பகத்தன்மை மோடியிடம் துளிக்கூட இல்லை என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சியினரை நோக்கி ஒரு விரலை நீட்டும்போது, மற்ற மூன்று விரல்கள் தங்களை நோக்கி காட்டுகின்றன என்பதை பிரதமர் மோடி மறந்துவிடக்கூடாது என, மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

### கும்முடிப்பூண்டி தொகுதியில் – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்

# டி.ஜெ.கோவிந்தராஜன் வாக்கு சேகரிப்பு!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

*சென்னை, ஏப். 20-*

*திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு வருமாறு*

*கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் இன்று 20.04.2026 திங்கட்கிழமை, காலை: 08.30 மணி - மா.பொ.சி.நகர், காலை: 9.00 மணி - விவேகானந்த நகர், காலை: 09.30 மணி - ஜெய்ஹிந்த நகர், காலை: 10.00 மணி கங்கன் தொட்டி,*

*எல்லாபுரம் வடக்கு ஒன்றியத்தில் மாலை: 04.00 மணி - செங்கரை, மாலை: 04.30 மணி - டி.ஆர்.குப்பம், மாலை: 05.00 மணி - வண்ணாங்குப்பம், மாலை: 05.30 மணி - தும்பாக்கம், மாலை: 06.00 மணி - தொள்வேடு, மாலை: 06.30 மணி -மேல்மாளிகைப்பட்டு, இரவு: 07.00 மணி - ஏனம்பாக்கம், இரவு: 07.30 மணி - கல்பட்டு,*

*இரவு: 08.00 மணி - ஆவாஜிப்பேட்டை, இரவு: 08.30 மணி - மாளந்தூர்,*

*கும்மிடிப்பூண்டி தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி*



தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து 134 (அ) வட்டத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு முரசொலி சிங்காரம், வட்டச் செயலாளர் ஜி.பி.செந்தில்குமரன், மாவட்டப் பிரதிநிதி ஏ.ஆனந்தன் ஆகியோர் தலைமையில், அமைப்பு சாரா மாநில தொ.மு.ச. தலைவர் ராஜா குப்புசாமி, மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த. சரவணகுமார், டாஸ்மாக் தென்சென்னை மாவட்ட தொ.மு.ச. செயலாளர் கி.கண்ணன், TUCS தொ.மு.ச. பொதுச் செயலாளர் ராஜன் சாமிநாதன், மா.போ.க.ஊ. முன்னேற்ற சங்க நிர்வாகிகள், முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

**2026** சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். சென்னை தெற்கு மாவட்டத்தில் சோழிங்கநல்லூர், சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் திருவொற்றியூர், சென்னை மேற்கு மாவட்டத்தில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, சென்னை கிழக்கு மாவட்டத்தில் அம்பத்தூர் ஆகிய தொகுதிகளில் இன்று (20–4–2026) அவர் மேற்கொள்ளவுள்ள பரப்புரை சுற்றுப்பயண விவரம் வருமாறு:

**20.4.2026 திங்கள்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | சோழிங்கநல்லூர் | சுனாமி நகர், செம்மஞ்சேரி. |
| காலை 10.45 மணி | திருவொற்றியூர் | தேரடி, திருவொற்றியூர். |
| மாலை 4.30 மணி | சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | 119, 119(அ), 120, 120(அ) கழக வட்டங்கள். |
| இரவு 7.30 மணி | அம்பத்தூர் | தொழிற்பேட்டை பேருந்து நிலையம் அருகில், மேனாம்பேடு சாலை, அம்பத்தூர். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 19.4.2026

கலைஞர் 100 1924 - 2023



### தமிழ்நாடு வளர்ந்தால்தான்

# இந்தியா வளர முடியும் என்ற நிலையை உருவாக்கியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திருப்பூரில் – பீகார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பிரச்சாரம்!

திருப்பூர், ஏப். 20 –

திருப்பூரில் திமுக தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில், பீகார் மாநில முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பேசியதாவது:



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன், எங்களது பயணம் இன்று, நேற்று ஏற்பட்டது அல்ல. அது, நீண்ட, நெடிய பயணம். தமிழக முன்னாள் முதல் வர் கலைஞர் , எனது தந்தை லாலு பிரசாத் யாதவ் காலத்தில் இருந்தே எங்களது பயணம் துவங்கியது.

தமிழ்மண்ணில் சமூக நீதி நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. பீகாரில், தமிழகத்தை பின்பற்றி சமூக நீதி நிலை நிறுத்தப் பட்டு வருகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு வேகமாக முன்னேறி வருகிறது. தொழில்நுட்பம் மூலம் நல்ல வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்து வருகிறது. கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம், மனித வள மேம்பாடு என எல்லா துறைகளிலும் தமிழ்நாடு வளர்ந்து நிற்கிறது.

**பிரதமருக்கு தகுந்த பாடம்!**

தமிழ்நாட்டில் தரமான கல்வி வழங்கப்படுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த ஜி.டி.பி வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பிடித்துள்ளது. ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி யில் இருக்கிறது. தனி நபர் வருமானத்திலும் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. தமிழ் நாடு வளர்ந்தால்தான் இந்தியா வளர முடியும் என்ற நிலையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உருவாக்கி உள்ளார்.

இந்தியாவில் உள்ள முன்னணி அரசியல் கட்சி தலைவர்களின் கோரிக்கையை புறம் தள்ளி, நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயன்றார் பிரதமர் மோடி. ஆனால், அவருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், தகுந்த பாடம் புகட்டி உள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தல் பிஸிகளுக்கு இடையே அவர், டெல்லிக்கு ஆட்டம் காட்டியுள்ளார். அவரது செயல், எங்களைப் போன்ற இளம் அரசியல் தலைவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. அவர், எங்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார்.

அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு எல்லா துறை களிலும் வளர்ச்சி கண்டு வருகிறது. இதை, எனது தந்தை அடிக்கடி நினைவு கூறுவார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழக மக்கள் எப்போதும். துணை நிற்க வேண்டும். அவரது கரத்துக்கு வலு சேர்க்கும் வகையில் நாங்களும் இணைந்து பயணிப் போம்.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் பேசினார்.



ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடம் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆவடி முதல் திருநின்றவூர் வரை உதயசூரியன் சின்னத்திற்கு வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தார் அப்போது ஏராளமானோர் கழக நிர்வாகிகள் பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள் இதில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பகுதிகழகச் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் அனைவரும் பைக் பேரணியாக சென்று பரப்புரை மேற்கொண்டனர்.